### தமிழர்களை, தமிழ்நாட்டை – ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தொடர்ந்து வஞ்சிக்குமானால்

# ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்!’

## நாடாளுமன்ற மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் பேச்சு!

**புதுடெல்லி, ஜூலை 30- நாடாளுமன்ற மக்களவையில், ஒன்றிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய தென்சென்னை தொகுதி நாடாளுமன்ற கழக உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், “தமிழர்களை, தமிழ்நாட்டை ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தொடர்ந்து வஞ்சிக்குமானால் – அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்!” என எச்சரித்தார்.**



தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் 25.07.2024 அன்று மக்களவையில் பட்ஜெட் விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:-

தமிழ்நாடு - தென்சென்னைத் தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக இந்த நாடாளுமன்றத்திலே, வெற்றி பெற்று நுழைவதற்கு தமிழ்நாட்டிலே தனக்கு வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்து ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து தருகின்ற, பெருமையும் பெருந்தன்மையும் உடைய எங்களுடைய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி. தென் சென்னைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி.

400 இடங்களுக்கு மேல் பெறுவோம் என்ற பகல் கனவை தவிடுபொடியாக்கி, 40 இடங்களிலும் இந்தியா கூட்டணிக் கட்சியை வெற்றி பெறச் செய்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி. பேரவைத் தலைவர் அவர்களே, சபையிலே மிகப் பிரதானமாகச் செங்கோல் வைக்கப்பட்டிருக்கிறது. நாம் முடி ஆட்சியைத் துறந்து மக்கள் ஆட்சிக்கு வந்து வெகு ஆண்டு காலம் ஆகிவிட்டது. காழ்ப்புணர்ச்சியின்றி, விருப்பு வெறுப்பு இல்லாமல், பாரபட்சமின்றி இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மக்களையும் ஒருசேர நடத்த வேண்டும் என்பதுதான் அரசியல் சாசனச் சட்டம் நமக்குத் தந்திருக்கின்ற மக்களாட்சியின் மகத்துவம். ஆனால், அதனை மறந்துவிட்டு தமிழ்நாடு, தமிழ் என்கின்ற சொற்களே இல்லாமல் இந்த நிதிநிலை அறிக்கை சமர்பிக்கப் பட்டிருக்கின்றது.

ஆகவே, என்னுடைய தாய்த் தமிழில், “இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்” என 3000 ஆண்டுகள் பாரம்பரியமிக்க தமிழ் மொழியிலே என்னுடைய உரையைத் துவங்கி மேலும் தொடர்கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் முன்பாக கூட நம்முடைய நிதி அமைச்சர்

The Government is determined, I quotes “to ensure that all Indians regardless of religion, castt, gender and age make subsfantial progress and realising their life goal and aspirations ” என்று சொல்லியிருக்கிறார் தெரியுமா.

அப்படியென்றால், இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டின் தமிழர்களாகிய நாங்கள் இந்தியர்கள் இல்லையா? ஏன் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றோம். இந்த நிதிநிலை அறிக்கையை ஏழாவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்திருக்கின்றார் என்று பெருமையோடு அனைவரும் கூறுகின்றார்கள். அது மகிழ்ச்சி தான். எட்டு முறை தமிழ்நாட்டிற்கு பிரதமர் அவர்கள் வருகை தந்தும் ஒரு இடத்தில் கூட அவர்தம் கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்தவர்களை வெற்றி பெறச் செய்யவில்லை தமிழ்நாட்டு மக்கள் என்று தான் ஜனநாயகத்தை உயர்த்திப்பிடித்த, கூட்டாட்சித் தத்துவத்தை உயர்த்திப்பிடித்த, மத நல்லிக்கணத்தை உயர்த்திப்பிடித்த தமிழ்நாட்டு மக்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்று நாங்கள் மட்டும் சொல்லவில்லை, எட்டு கோடி தமிழ் மக்கள் சொல்கின்றார்கள்.

### விஸ்வகுருவின் நீதி பரிபாலனம் இதுதானா?

10 ஆண்டுகளாகத் திரும்பிப் பார்த்திராத அண்டை மாநிலங்களான பீகாருக்கும், ஆந்திர பிரதேசத்திற்கும் அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கின்ற ஒன்றிய அரசாங்கத்திற்குத் தமிழ்நாட்டிற்குக் கிள்ளிக் கொடுப்பதற்கு கூட மனமில்லை. ஏப்ரல் மாத ஜிஎஸ்டி வசூல் மூலம் பீகார் மாநிலம் ஒன்றிய அரசுக்கு கொடுத்தது 1,992 கோடி. ஆனால் தமிழ்நாடு கொடுத்தது 12,210 கோடி. பீகாருக்கு ஒன்றிய அரசாங்கம் இந்த நிதி நிதியிலே வாரி வழங்கி இருப்பது 37 ஆயிரத்து 500 கோடி. தமிழ்நாட்டிற்கு பூஜ்ஜியம். இது தான் பிரதமர் அடிக்கடி சொல்லுகின்ற வாசுதேவ குடும்பகம், உலகமெல்லாம் எங்களுடைய குடும்பம் என்பதன் அர்த்தமா? விஸ்வ குருவின் நீதி பரிபாலனம் இது தானா?

இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் ஐந்து முறை ஆந்திரப் பிரதேசம் என்ற சொல்லை உச்சரித்து இருக்கின்றார், ஐந்து முறை பீகார் என்ற சொல்லை உச்சரித்து இருக்கின்றார். ஆனால் ஒரு முறை கூட நம்முடைய தமிழ்நாடு, ஏன் தமிழ்நாடு மட்டுமல்ல, தெலுங்கானா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் பெயர்களைக் கூட உச்சரிக்கவில்லை. எனக்கு இப்பொழுது ஹோசிமின் என்கின்ற வியட்நாம் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிய போராளியின் கூற்று நினைவுக்கு வருகிறது, “தெற்கிலிருந்து தான் எதுவும் தொடங்கும்” என்று அவர் சொன்னார். தொடங்கிய எதையும் அவருடைய வழியிலே எங்களுடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் சொன்னார், “தொடங்கிய எதையும் தொடர்ந்து முடிக்கின்ற வலிமையும் தெற்கிற்கு உண்டு” என! ஆகவே தான், தொடர்ந்த போராட்டமாக நிதி ஆயோக் என்னும் அந்த அமைப்பு 13 தளங்களிலே முதலிடத்திலே இருக்கின்ற பெருமை தமிழ்நாட்டிற்கு உரியது என்பதைச் சுட்டி இருக்கின்ற அந்த நிதி ஆயோக் கூட்டத்தினை எங்களுடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புறக்கணித்து இருக்கின்றார். அடுத்த அண்டை மாநிலத்தினுடைய முதலமைச்சர்களும் புறக்கணித்து இருக்கின்றனர். எங்களுடைய அன்பிற்குரிய மாநிலங்களான சிக்கிம், இமாச்சல் பிரதேசம், உத்தர்கண்ட் ஆகிய மாநிலங்களுக்குப் பேரிடர் மேலாண்மை நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதிலே எங்களுக்கு மன மாச்சர்யம் இல்லை. மனக்குறைபாடு கிடையாது. ஏனென்றால் அனைத்து மாநிலங்களையும் சகோதர உணர்வோடு பார்க்கின்றவர்தான் எங்களுடைய முதலமைச்சர்.

இமாச்சல் பிரதேசத்திற்கு 10 கோடி ரூபாய் நிதி உதவி அனுப்பி வைத்திருக்கின்றார். கேரள மாநிலத்திற்கு வெள்ள பேரிடர் நிதியை அனுப்பி வைத்திருக்கின்றார். சொல்லப்போனால் மணிப்பூரிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற நம்முடைய பெண்களுக்கு, அவர்கள் தங்கி இருந்த அந்த நிவாரண முகாமிற்கு நிவாரண நிதியை அனுப்பி வைத்திருக்கின்றார். ஒடிசாவில் ரயில் விபத்து ஏற்பட்ட பொழுது உடனடியாக முகாம் அமைத்து 24 மணி நேர மையம் அமைத்து, பேரிடரில் பயணிகளைக் கொண்டு வருவதற்கான உதவிகளைச் செய்து இருக்கின்றார். இவ்வளவும் நாங்கள் செய்திருக்கின்றோம். யாரையும் குறை சொல்லவில்லை.

ஆனால் எங்களுடைய சென்னை வெள்ளத்தில் தத்தளித்த போது, மக்கள் துயரத்தில் உழன்ற போது, பல்வேறு முறை வந்த ஒன்றிய அமைச்சர்கள், இதுகாறும் நாங்கள் 37 ஆயிரம் கோடி கேட்டும் எங்களுக்கு தந்தது வெறும் 276 கோடி. அதிலும், சட்டபூர்வமான தொகை தான். இது தான் பிரதமர் முன்வைக்கின்ற அகண்ட பாரதமா? நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே பிறந்தவர். மகாகவி பாரதியாரை மிக நன்றாக அறிந்தவர். பிரதமர் அவர்களும் பாரதியாரையும் திருவள்ளுவரையும் அடிக்கடி மேற்கோள் காட்டுவார். பாரதியார், “எங்கள் பாரத தேசம் என்ற தோள் கொட்டுவோம்” என்று முழங்கினார். அதே பாரதியார் தான் பரலி சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் சொல்லுகின்றார்

“தம்பி நான் ஏது செய்வேனடா! தமிழை விட மற்றொரு மொழி சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனை விட மற்றொருவர் வலிமையிலும் அறிவிலும் உயர்ந்தவர்கள் எனச் சொல்வதில் எனக்கு சம்மதமில்லை”

### எங்கள் உரிமைக் குரல்!

இதில் ஏதோ உயர்வு தாழ்ச்சி இவற்றைக் கொண்டு வரவில்லை. பாகப்பிரிவினை அல்லது எதைப்பற்றியும் நான் பேசவில்லை. ஆனால் உரிமை என்று வரும்போது நம்முடைய உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும். “உங்கள் எதிரிகள் தான் உங்களுடைய ஆயுதத்தை தீர்மானிக்கி றார்கள்” என்னும் புரட்சி வீரர் சேகுவேராவின் அந்த சொற்றொடரை பின்பற்றி எங்கள் உரிமைக் குரலை இங்கே ஒலிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கூட்டணிக் கட்சிகளை மட்டுமே திருப்திப் படுத்தச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த பட்ஜெட்டை “This is not an All India Budget”, But an “Alliance Budget” என்று சொல்லுகின்றேன். ஏனென்றால் கூட்டணியில் அங்கம் வகிக்காத, ஓரிடத்திலே கூட இந்த பி.ஜே.பி. கூட்டணியை வெற்றி பெறச் செய்யாத எங்களுடைய தமிழ்நாடு முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டி ருக்கிறது. தமிழ்நாட்டுக்கு என்று எந்த பிரதானமான மிகப்பெரிய திட்டங்கள் எதுவுமே கொடுக்கப்படவில்லை. நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஆகட்டும், ரயில்வே திட்டங்கள் ஆகட்டும் அல்லது கோவை மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ரயில் குறித்த திட்டங்கள் ஆகட்டும், அத்தனையும் கிடப்பிலே போடப் பட்டுள்ளன. ஒன்றை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன், நிதியமைச்சர் அறிவித்திருக்கின்ற பல திட்டங்கள் எங்களுடைய “திராவிட மாடல்” ஆட்சியிலே இருந்து எடுக்கப்பட்ட திட்டங்க ளாகும். ஆயிரம் தொழிற்பயிற்சி மையங்கள் மேம்பாட்டு திட்டமாகட்டும், மகளிருக்கான தோழி விடுதிகள் (இத்திட்டம் தமிழ்நாட்டிலே மிகச்சிறப்பாக நடைபெறுகிறது), தொழிலாளர் தங்கும் விடுதிகளாகட்டும் ஏற்கனவே செயல்படுத்தி வரும் திட்டங்களை அவர் எடுத்து கையாண்ட நன்றிக்காகவாவது தமிழ்நாட்டிற்கு அவர் நிதி ஒதுக்கியிருக்க வேண்டாமா?

ஏற்கனவே, நிதிச் சுமையிலே தள்ளாடிக் கொண்டிருக்கின்றது தமிழ்நாடு. உதாரணத்திற்கு, தென்சென்னை தொகுதியை எடுத்துக் கொண்டீர்கள் என்றால் சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட ரயில் திட்டம் அதற்கான அடிக்கல் 2020ஆம் ஆண்டு நம்முடைய ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது சென்னையிலே கலைவாணர் அரங்கத்தில். 2021ஆம் ஆண்டு மத்திய அரசு அதற்கான நிதியாக 63,000 கோடி அளிக்கப்படும் என்று சென்னையிலே அரசு விழாவில் பிரதமர் அறிவித்தார். ஆனால், இன்றுவரை ஒரு அம்மஞ்சல்லி கூட, அதாவது ஒரு நயா பைசா கூட அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கவில்லை. தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நம் மக்கள் என்கின்ற கருணை உள்ளத்தோடு எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் 33,000 கோடி ரூபாய் ஒதுக்கி அந்த பணியைத் துவக்கி இருக்கின்றார். ஏற்கனவே அந்த நிதிச் சுமை நமக்கு!

இப்பொழுது பாருங்கள், பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்டத்தில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 3 கோடி வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கின்றார் நிதி அமைச்சர். ஒரு வீட்டிற்கான ஒன்றிய அரசின் பங்கினை உயர்த்துவது குறித்து இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்த விதமான அறிவிப்பும் இல்லை. ஒன்றிய அரசின் பங்கு ஒரு வீடு கட்டுவதற்கு 1.5 லட்சம் என்றால் மாநில அரசாங்கம் 12ல் இருந்து 14 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும். செலவழிப்பது மாநில அரசாங்கம் ஆனால் திட்டத்தின் பெயர் மட்டும் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம். இது எந்த விதத்தில் நியாயம்? முத்திரைத்தாள் மாநில அரசியலின் பட்டியலில் உள்ளது. அதனை குறைக்குமாறு மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப் பட்டு இருக்கிறது. எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர்கேட்கின்றார் அறிவுறுத்துகிறீர்கள் அதற்கான இழப்பீடு தொகையை நீங்கள் வழங்க வேண்டும் அல்லவா? ஏற்கனவே சரக்கு சேவை வரி விதிப்பால் தமிழ்நாட்டிற்கு ஆண்டொண்டிற்கு ஏற்பட்ட 20,000 கோடி ரூபாய் இழப்பிற்கு இதுவரை நீங்கள் இழப்பீடு வழங்கி இருக்கிறீர்களா? என்று கேட்கிறார். அவர் மட்டும் அல்ல ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் கேட்கின்றார்கள்.

இந்த பட்ஜெட் என்பது ஐந்து அம்சத் திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது, ”It is a Prime Minister’s Package” என்று நிதிநிலை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். சென்ற இடைக்கால நிதிநிலை அறிக்கையிலேயே, பெண்கள், உழவர்கள், ஏழைகள், இளைஞர்கள் இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த பட்ஜெட் சிறப்பாக செயல்படுத்தப்படும் என்று சொல்லி இருந்தார். அதிலே ஒரு சிறிய உள்ளடக்கமாக இந்த பிரைம் மினிஸ்டர் பேக்கேஜ்ஜை அறிவித்திருக்கிறார். வேலைவாய்ப்பு, கல்வி, திறன் மேம்பாடு, பெண்களுக்கான முன்னேற்றம் என்பது தான் அந்த ஐந்து அம்சத் திட்டம்.

வேலைவாய்ப்பை எடுத்துக்கொள்ளுங்கள், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 4.1 கோடி இளைஞர்களுக்கு, வேலை வாய்ப்பு, திறன் மேம்பாடு முயற்சிகளுக்கு 2 லட்சம் கோடி செலவு செய்யப்படும் என்கின்றார். 2014இல் ஐந்து புள்ளி 5.45% இருந்த வேலை வாய்ப்பின்மை 2024 இல் 10.2% உயர்ந்து இருக்கின்றது. சமீபத்திலே குஜராத் மாநிலத்தில் பரூஜ் மாவட்டத்தில் அங்கலீஸ்வர் என்ற ஊரில், தனியார் நிறுவனம் நடத்திய ஒரு நேர்காணலில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கூடி அந்த கட்டிடமே இடிந்து விடுகின்ற அபாயத்தை ஏற்படுத்தியது. இதுதான் பத்தாண்டு கால பாஜக அரசின் சாதனை.

அடுத்ததாக திறன் மேம்பாடு ஐந்து ஆண்டுகளில் 500 நிறுவனங்களில் ஒரு கோடி இளைஞர் களுக்கு இன்டர்ன்ஷிப் வாய்ப்புக்கள் தரப்படும், ஊக்கத்தொகை 5000 அளிக்கப்படும் என்கிறார். இந்த இன்டர்ன்ஷிப் பயிற்சி செலவில் 10 சதவிகிதத்தை இந்த நிறுவனங்கள் சி.எஸ்.ஆர் நிதியிலிருந்து வழங்குமாம். அதாவது, ஐந்தாண்டுகளில் 60 ஆயிரம் கோடி ரூபாய். இவையும் பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே பயன்பெறும். MSME என்று சொல்லப்படு கின்ற சிறுகுறு நிறுவனங்களோ அல்லது நிறுவனங்களோ இவையால் பயன்பெறப் போவதில்லை. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20 லட்சம் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்குவதாக அறிவித்திருக்கின்றார் நிதி அமைச்சர். ஆனால், பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டும் ஓராண்டுக்கு 15 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கி வருகின்றார் எங்களுடைய முதலமைச்சர். Formal Sector-இல் முதன் முறையாகப் பணியில் சேருகின்ற இளைஞர்களுக்கு ஒரு மாத ஊதியம் வழங்கப்படும், அவர்கள் EPFO வில் பதிவு செய்யப்பட்ட பின்பாக குறைந்தபட்ச 15,000 ரூபாய் அல்லது உயர்ந்த பட்சம் ஒரு லட்சம் ஊதியம் பெற்றால் மட்டுமே இந்த ஒரு மாத ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படும். ஒன்றை இங்கு நினைவூட்டுகின்றேன் குறைந்தபட்சம் 20 தொழிலாளர்கள் இருந்தால் தான் ஒரு நிறுவனம் EPFO சட்டத்திற்குள் வரும். ஆகவே இதுவும் சிறு குறு நிறுவனங்களுக்குப் பயன் தராது. பெரு முதலாளிகளுக்கு பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே பயன்படும்.

பெண்கள் முன்னேற்றம் மூன்று லட்சம் கோடிகள் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கிராமப்புற பொருளாதாரத்தை அடியோடு சீர்குலைக்கின்ற, MGNREGA திட்டத்திற்கான நிதி முற்றிலுமாக முடக்கப் பட்டட்டிருக்கிறது. நாரி சக்தி என்று சொல்கிறீர்கள் இதுகாறும் எங்களுடைய பாதிக்கப்பட்ட மணிப்பூர் பெண்களுக்கான நிவாரண நிதியை இந்த அரசு வழங்கிருக்கின்றதா? நிதியையும், மணிப்பூர் பெண்களுக்கான நிவாரண நிதியையும் வழங்காமல் பெண்கள் முன்னேற்றம் என்பது எப்படி இருக்கிறது தெரியுமா? “படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்” என்பது போல் அல்லவா இருக்கிறது!

ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாட்டு திறன், பெண்கள் முன்னேற்றம் இப்படி அனைத்திலுமே அடிப்படைக் கட்டமைப்புகளை சிதைத்து விட்டு, கோபுரத்திலே உங்களை உட்கார வைப்போம் என்கின்ற பொய் வாக்குறுதிகளை அள்ளித்தெளிப்பதாக இருக்கிறது இந்த பட்ஜெட். கல்வி என்று வரும் போது நீங்கள் அடிப்படை கல்விக்காக கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்குகிறீர்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால், மேற்படிப்புக்காக நடத்தப்படுகின்ற நுழைவுத் தேர்வுகளில் நடைபெறுகின்ற மோசடி, வினாத்தாள் கசிவு, இன்னும் சொல்லப்போனால் உலகில் எங்குமே கேள்விப்படாத அளவிற்கு நகைச்சுவைக்குரிய Grace Marks கருணை மதிப்பெண் தருகின்ற முறையை ஒழித்துக் கட்டாமல், கல்விக்காக நாங்கள் மேம்பாட்டு நிதி ஒதுக்குவோம் என்பது மிக நகைப்பிற்குரியதாக இருக்கிறது. ஆகவே தான், நான் இந்த பட்ஜெட்டை “BASE Budget without any Base” என்கின்றேன். It is a Bihar Andhra Pradesh Satisfying Elbow Greasing Budget, BASE Budget without any base.

நான் இங்கு 1909-1910ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே அன்றைய லிபரல் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை ஒன்றைச் சுட்ட விரும்புகிறேன். என்று அது இன்றளவும் பாராட்டப்படுகிறது. ஏனென்றால் அது பிரிட்டனில் உள்ள வசதி மிக்க பெரும் முதலாளிகளிடம் உள்ள பணத்தை அவர்களிடமிருந்து வரியாகப் பெற்றுச் சமூக நலன் சார்ந்த திட்டங்களுக்கு பயன்படுத்தும் அறிவிப்பை வெளியிட்டது. அதை தயாரித்தவர்கள் “Terrible Twins” என அழைக்கப்படுகின்ற டேவிட் லாயிட் ஜார்ஜ் மற்றும் அவரது நண்பர் வின்ஸ்டன் சர்ச்சில். இந்த பட்ஜெட் அதற்கு எதிர் மாறாக, மாநிலங்களை மாற்றந் தாய் மனப்பான்மையோடு அணுகுகின்ற Step Motherly பட்ஜெட்!

I would like to quote our Party Supremo and Founder of our DMK Party பேறறிஞர் அண்ணா. அவர் மேலவை உறுப்பினராக இருந்தபோது அவர் பேசியதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

I quote, “What right has this Government to demand more and more taxes, when their performance is of such a low order? I think that this Government, after having taxed the people so much, has not given proper returns or proper accounts to the nation. Therefore, though I realise that I do not have the power to stop it, I cannot abet a crime of allocating colossal sums to this inefficient, unrealistic, unresponsive and undemocratic Government that is being carried on. But whatever may be the criticism that is offered on this side, they have their numbers and their logic is based on numbers. Therefore, Mr Chairman, offering this criticism, we have to go to the other forum and receive justice from the only source, the first source, the primary source, the public and Mr.Chairman, we are confident of getting a proper verdict.”

ஆமாம்; எங்களுடைய மக்கள் மிகச் சரியான தீர்ப்பை வழங்கியதால் தான், மெஜாரிட்டியாக இருந்த பாஜக அரசாங்கம் இன்று மைனாரிட்டியாக இருக்கின்றது. “தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவருக்கொரு குணமுண்டு.” இதை மறந்து, மேலும், தமிழர்களை, தமிழ்நாட்டை இந்த அரசாங்கம் வஞ்சிக்குமானால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சிலப்பதிகாரத்தை மிக நன்றாக அறிவார் அந்த காப்பியத்தில் இளங்கோவடிகள் கூறிய அந்த வரியை நான் நினைவூட்டுகின்றேன். இதற்கு மேலும் தமிழ்நாட்டை, தமிழ் மக்களை வஞ்சித்தால் இளங்கோ வடிகளுடைய அந்த வரிகளைத் தான் நான் நினைவூட்ட வேண்டும்.

**“அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்”**

இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் பேசினார்.



சிவகங்கை மாவட்டம் காரையூரில் முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர். காரை.இரா. செழியன் அவர்களின் 6வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு கூட்டுறவுத்துறை அமைச்சரும், சிவகங்கை. மாவட்டச் செயலாளருமான கேஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் திருமதிமல்லிகாசெழியன், மகன் தமிழ்நம்பி, மருமகள்கள் வைஷாலி, சிவசக்தி, மகள் தமிழ்வாணி ராதாகிருஷ்ணன் பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



நெல்லை மாநகராட்சி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தோறும் கல்லூரி மாணவர்கள் குப்பைகளை அகற்றும் மெகா துப்புரவு பணி முதல் நாள் நிகழ்வில் நெல்லை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் (பொறுப்பு) ராஜு ஆகியோர் மெகா துப்புரவு பணியை துவக்கி வைத்தனர். உடன் கல்லூரி நிர்வாகிகள், மாணவர்கள் மற்றும் கழகத்தினர் பலர் உள்ளனர்.



இராமேஸ்வரம் 9வது வார்டு சிவகாமி நகரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மூன்று பேர் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு, கைது செய்து சிறையில் அடைத்தது. இதனையறிந்த மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சாமுத்துராமலிங்கம் தன்னுடைய சொந்த செலவில் வழக்கறிஞர்களை நியமனம் செய்து விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில், மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சாமுத்துராமலிங்கம் சார்பில், சம்பந்தப்பட்ட மீனவர்களின் குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் ரூ,10,000, நிதி உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் அவர்களை விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர்மன்றத் தலைவரும் நகரச் செயலாளருமான கே.இ.நாசர்கான், அக்குடும்பத்தினரை நேரில் சந்தித்து உறுதியளித்தார். உடன் வார்டு கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாழை மு. கருணாநிதி
### ஜூலை 30 (1986)



இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். தமிழக சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் மகத்தான ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

“மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கே அதிக வாய்ப்புத் தரவேண்டும் என்பது எனது ஆசை! எனது சொந்த மாவட்டத்திலேயே அந்த ஆசை தாழை மு. கருணாநிதி மூலம் நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு தாம் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை தாழை தமது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**